[வலைப்பின்னல் மாற்றுமுறை]

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *1999 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியச் சட்டம்*

---

[*1999, திசெம்பர் மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1999, திசெம்பர் மாதம் 03 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை: ரூபா 7.75** **தபாற் செலவு : ரூபா 3.50**

**1999 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியச் சட்டம்**

*(1999, திசெம்பர் மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*ச.வ. - ஓ. 8/95*

**புலமைப்பரிசில்களை வழங்குவதன் மூலம் இலம்பாடுற்ற மற்றும் இடம்பெயர்ந்த பிள்ளைகளின் கல்வியை முன்னேற்றுவதற்காக "யுனெஸ்கோ புலைப்பரிசில் நிதியம்" என அழைக்கப்படும் நிதியமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதுமானதொரு சட்டம்**

புலமைப்பரிசில்களை வழங்குவதன் மூலம் இலம்பாடுற்ற மற்றும் இடம்பெயர்ந்த பிள்ளைகளின் கல்வியை முன்னேற்று வதற்கு ஏற்பாடு செய்வதும், அத்தகைய நோக்கத்திற்காக நிதியமொன்றைத் தாபிப்பதும் இலங்கை அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது ஆதலால் ; பாயிரம்.

ஆகவே, இப்பொழுது, இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

**1.** இச்சட்டம் 1999 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (1) யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியம் என அழைக்கப்பட வேண்டிய நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். இது இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும். யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியத்தைத் தாபித்தல்.

(2) நிதியமானது, (1)ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல் வேண்டுமென்பதுடன், இடையறா வழியுரிமையும் பொது இலச்சினை ஒன்றும் கொண்டதாக இருத்தலும் வேண்டும். அத்துடன் அது அத்தகைய பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக தொடுக்கவும்படலாம்.

(3) நிதியத்தின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்படுவதை இயலச் செய்யும் நோக்கத்திற்காக, அரசாங்கம், நிதியத்திற்கு மானியங் களைக் காலத்திற்குக்காலம் நன்கொடையாக வழங்கலாம்.

*நிதியத்தின் முகாமைச்சபை.*

**3.** (1) நிதியத்தின் நிருவாகமும், முகாமையும், கட்டுப்பாடும் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படுகின்றவாறுஅமைக் கப்படும் முகாமைச் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியத்தின் முகாமைச்சபை (இது இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர், இவரே சபையின் தவிசாளராக இருத்தல் வேண்டும், (இவர் இதனகத்துப்பின்னர் "தவிசாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார் ;

(ஆ) யுனெஸ்கோவுக்கான இலங்கைத் தேசிய ஆணைக் குழுவின் செயலாளர் நாயகம் ;

(இ) கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான பிரதான கணக்காளர் ;

(ஈ) கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான விசேட கல்விப் பகுதிப் பணிப்பாளர் ;

(உ) சிறுவர் பாதுகாப்பு, நன்னடத்தைத் திணைக்களத்தின் ஆணையாளர் ;

(ஊ) சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் ;

(எ) கலாச்சார, மத விவகாரங்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சைச் சேர்ந்தவரும், அந்த அமைச்சரினாற் பெயர்குறித்து பிரதிநிதி ஒருவர் ;

(ஏ) நிதி என்றும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரும், பொதுத் திறைசேரியைச் சேர்ந்தவருமான பிரதிநிதி ஒருவர்;

(ஐ) யுனெஸ்கோவுக்கான இலங்கைத் தேசிய ஆணைக் குழுவின் பிரதிச் செயலாளர் நாயகம், இவர் சபையின் செயலாளராகப் பணியாற்றுதல் வேண்டும் ;

(ஒ) தவிசாளரால் நியமிக்கப்பட்ட வேறு இரண்டு உறுப்பினர்கள், இவர்கள் ஒவ்வொருவரும் (3) ஆம், (4) ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய அவருக்குத் தவிசாளரினால் வழங்கப்படும் நியமனக் கடிதத்தில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

(3) தவிசாளர் (2) ஆம் உட்பிரிவின் (ஒ) பந்தியின்கீழ் அவரால் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினரின் நியமனத்தை இல்லாதொழிக்கலாம்.

(4) இரண்டாம் உட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் சபையின் உறுப்பினர் எவரும், அதன் சார்பில் தவிசாளருக்கு முகவரியிடப்படும் கடிதம் ஒன்றின் மூலம் சபையிலிருந்து எந்நேரத்திலும் விலகலாம்.

(5) தவிசாளர் சபையின் ஏதேனும் கூட்டத்திற்கு வருகை தராத போது, சமுகமளித்துள்ள உறுப்பினர்களிடையே இருந்து தெரிவுசெய்யப்படும் எவரேனும் உறுப்பினர், அத்தகைய கூட்டத்தின்போது தலைமை தாங்குதல் வேண்டும்.

(6) சபையின் ஒரு கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் நான்கு உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையானது, அதன் கூட்டங்கள் சம்பந்தமாகவும் அத்தகைய கூட்டங்களின்போது அலுவல்களைக் கையாள்வது சம்பந்தமாகவும் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

(8) சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் ஒன்று இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதெனக் கருதப்படுதல் ஆகாது.

4. சபை பின்வரும் தத்துவங்களைக். சொண்டிருத்தல் வேண்டும் :– *சபையின் தத்துவங்கள்.*

(அ) உள்ளூர் அல்லது வெளிநாட்டுமூலங்களிலிருந்து, காசாகவோ அல்லது பொருள் வகையாகவோ, மானியங்களை, கொடைகளை அல்லது நன்கொடை களைப் பெறுவதற்கும் ;

(ஆ) இச்சட்டத்தினால் அல்லது ஏதனேும் கொள்வனவை, மானியம், கொடை என்பவற்றின் பயனாக அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக் கூடிய ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தைப் பெறுவதற்கும் அல்லது வைத்திருப்பதற்கும் அத்துடன் நிதியம் உரித்தாகவரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தை விற்பதற்கும், அளிப்ப தற்கும் அல்லது வேறுவகையின் கையுதிர்ப்பதற்கும் ;

(இ) நிதியத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வ தற்காக புலமைப் பரிசில்களை வழங்குவததற்கும் ;

(ஈ) நிதியத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அத்துடன் நிதியத்தின் குறிக் கோள்களை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும், ஒன்றில் நேரடியாகவோ அல்லது அலுவலர்கள், சேவையாளர்கள் அல்லது சபையினால் அதன் சார்பில் எழுத்தில் அதிகாரம் அளிக்கப்படும் அலுவலர்கள் மூலமாகவோ செய்துகொள்வதற்கும் ;

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, நிதியத்தின் அலுவல்களை நிருவகிப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமிப்பதற்கும் ஊழியத்தில மர்த்துவதற்கும், அவர்களுக்கு ஊதியமளிப்பதற்கும் அத்துடன் அத்தகைய ஊழியர்களின் நியமனம், பதலியுயர்வு, ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு சம்பந்தமாகவும் மற்றும் அவர்களுக்கு லீவும் ஏனைய நன்மைகளும் வழங்கப்படுதல் சம்பந்தமாகவும் விதிகளை ஆக்குவதற்கும்;

(ஊ) நிதியத்திற்குச் சொந்தமான பணங்களை முதலீடு செய்வதற்கும், சபையின் தற்றுணிபின்படி அத்த கைய முதலீடுகளை மீளழைப்பதற்கும், மீள்முதலீடு செய்வதற்கும், வேறுபடுத்துவதற்கும் ; அத்துடன்

(எ) நிதியத்தின் நிருவாகம் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் விதிகளை ஆக்குவதற்கும் ;

ஆன தத்துவம்.

நிதியத்திற்குப் பணங்களை இடம்மாற்றுதல்.

**5.** இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து -

°(அ) பொதுத் திறைசேரியில் 6,000-0-0-6-65 (யுனெஸ்கோ நிதியம்) என்னும் இலக்கக் கணக்கிலும் ;

(ஆ) வெளிநாட்டு அல்லது உள்ளூர் மானியங்களின் சேமிப்புகளிலும் வரவில் உள்ள எல்லாப் பணங்ள களும் நிதியத்தியத்திற்கு உரித்தாக்கபபடுதல் வேண்டும்.

யுனெஸ்கோ நிதியக் கணக்கு.

**6.** சபையானது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொண்றில் "யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியக்கணக்கு" என அழைக்கப்படும் கணக்கொண்றைப் பேணிவருதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கணக்கில் பின்வருவன வரவில் வைக்கப்படுத்லும் வேண்டும்

(அ) ஐந்தாம் பிரிவின் முறை காரணமாக நிதியத்தற்கு உரித்தாக்கப்படும் எல்லாப் பணங்களும் ;

(ஆ) நிதியத்திற்கு அளிக்கப்படும் எவையேனும் மானியங்கள், கொடைகள் அல்லது நன்கொடைகள் ;

(இ) முதலீடுகளிருந்து பெறப்படும் ஏதேனும்வருமானம் அல்லது நிதியத்திற்குப் போமதியான ஏனைய வரவுகள் ; அல்லது

(ஈ) புத்தக விற்பணையிலிருந்து கிடைக்கும் ஏதேனும் வருமானமும், நிதியத்தினால் நடாத்தப்படும் பல்வேறு நிதி திரட்டும் செயற்பாடுகளிருந்து பெறப்படும் ஏனைய வருமானங்களும்,

(உ) இச்சட்டம் தொடங்கும் தேதியின் பின்னர் நிதியத்திலிருந்து திரளக்கூடிய ஏனைய பணங்கள் யாவும்.

நிதியத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர்.

**7.** யுனெஸ்கோவுக்கான இலங்கை தேசிய ஆணைக்குழுவின் செயலாளர் நாயகமே, சபையின் பணிப்புக்கு அமைவாக, நிதியத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும்.

நிதியத்தின் பணங்கள் எந்நோக்கங்களுககுப் பயன்படுத்தப் படுமோ அநநோக்கங் கள்.

**8.** நிதியத்திற்குச் சொந்தமான பணங்களை முக்கியமான பின்வரும் குறிக்கோள்களுக்காகப் பயன்படுத்துவது சபையின் கடமையாதல் வேண்டும். அதாவது –

(அ) இலம்பாடுற்ற மற்றும் இடம்பெயர்ந்த பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில் வழங்குதல் ;

(ஆ) விற்பனைக்காகப் புத்தகங்களை வெளியிடுவதில் உறப்படும் செலவுகளைச் சமாளித்தல்.

கணக்கய்வும் வருடாந்த அறிக்கையும்.

**9.** (1) நிதியத்தின் வருமானமும் செலவினமும் மற்றும் அதன் ஏனைய எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய உரிய கணக்குப் புத்தகங்களை, சபை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் நிதியத்தின் கணக்குகளின் கணக்காய்விற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) சபையானது, ஒவ்வோராண்டு இறுதியிலும், அந்த ஆண்டின்போதான நிதியத்தின் அலுவல்களது நிருவாகம் பற்றிய அறிக்கை ஒன்றைத் தயாரித்தலும், அத்தகைய அறிக்கையை அமைச்சருக்கு சமர்ப்பித்தலும் வேண்டும். அமைச்சர் அத்தகைய அறிக்கையை அது தொடர்புபடுத்தும் ஆண்டையடுத்து வரும் ஆண்டு இறுதிக்கு முன்னராக பாராளுமன்றத்தின்முன்னிலையில் இடச்செய்வித்தல் வேண்டும்.

நிதியத்தின் நிதியாண்டு

**10.** நிதியத்தின் நிதியாண்டானது பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

குறித்த சில தீர்வைகள் வரிகளிலிருந்து நிதியத்திற்கு விலக்களித்தல்.

**11.** கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் எவையேனும் பண்டங்களின் இறக்குமதி, நிதியத்தின் குறிக்கோள்களை முன்னேற்றுவதற்கு உகந்ததென அவர் கருதினால் நிதியத்தினால் இறக்குமதி செய்யப்படும் அத்தகைய பண்டங்கள் மீதான ஏதேனும் சுங்கத் தீர்வைக் கொடுப்பனவிலிருந்து நிதியத்திற்கு விலக்களிக்கலாம்.

பகிரங்க சேவை அலுவலர்களை நிதியத்தின் பணி யாட்டொகுதிக்கு நியமித்தல்.

**12.** (1) பகிரங்க சேவையைச் சேர்ந்த எவரேனும் அலுவலர் அந்த அலுவலரினதும் அரசங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிதியத்தின் பணியர்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) பகிரங்க சேவையைச் சேர்ந்த எவரேனும் அலுவலர் நிதியத்தின் பணியாட்டொகுதிக்குள் தற்காலிகமாக நியமிக்கப்படு மிடத்து 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையைச் சேர்ந்த அலுவலர் ஒருவர் நிதியத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படு மிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு அரசாங் கத்திற்குச் சேவையாற்றுவதற்கு உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டுள்ளவரான எவரேனும் ஆளை சபை ஊழியத்தேத்திற்கு அமர்த்துகின்றவிடத்து, அந்த ஆள் நிதியத்திந்குச் சேவையாற்ம் காலப்பகுதியெதுவும் அத்தகைய ஒப்பந்தத்தின் கட்டுப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத்திற்கு ஆற்றப்பட்ட சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

விதிகளை ஆக்குவதற்கு சபைக்குள்ள தத்துவம்.

**13.** சபையின் தத்துவங்ளையுமும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தல் மற்றும் புரிதல் சம்பந்தமான அல்லது அத்துடன் தொடர்புட்ட் அல்லது அதன் இடை நேர்விளைவான ஏதேனும் கருமம் தொடர்பில் அவசியமானவை என சபை கருதக்கூடியவாறான அத்தகைய விதிகளை சபை ஆக்கலாம்.

தண்டனைச் சட்டக் கோவையின்கீழ் நிதியத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

**14.** நிதியத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படு தல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் நிதியம் அட்ட வணைப்படுத்தப் பட்ட நிறுவனம் ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

**15**. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட நிதிய மானது அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடு கள் அதற்கிணங்கப் பொருள்கொள்ளப்படுதலும் வேண்டும்.

ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**16**. இச்சட்டதின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

**17**. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலேயொழிய

"இலம்பாடுற்ற பிள்ளை" என்பது, உடல் அல்லது உளக் குறைபாடு உள்ள பாடசாலை செல்லும் வயது கொண்ட ஒரு பிள்ளை எனப் பொருளாகும் ;

"இடம்பெயர்ந்த பிள்ளை" என்பது, அவரது பெற்றோரால் கைவிடப்பட்ட அல்லது அவரது பெற்றோர்கள் அவருக்கு கல்வி புகட்ட வசதி இல்லாதவர்களாக உள்ள அல்லது அவரது பெற்றோர்கள் மரண மடைதுள்ள அல்லது உயிர் வாழும் பெற்றோர் அவருக்குக் கல்வி புகட்ட வசதி இல்லாதவராக உள்ள பாடசாலை செல்லும் வயதுகொண்ட ஒரு பிள்ளை எனப் பொருளாகும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*